உ

பரமபதி துணை.

இந்து தேசாபிமானிகள்

# செந்தமிழ்த் திலகம்

என்னும்

## பக்திரசக்

# கீர்த்தனைகள்

இவை

கன்னிச்சமீன் சரபம் உமேலே

முத்துசாமிக் கவிராயரவர்கள்

மாணாக்கர்

பூமிபாலகதாஸ் அவர்கள்

இயற்றியது.

மதுரை
அ. தர்மலிங்கம்பிள்ளை
வெளியிட்டது.
1920. [அணா 5

...ed Copy Right.

62
OFFICE OF THE ... 4- JAN ... MADR...
V2WX
N20.
179117

உ

பரமபதி துணை.

இந்து தேசாபிமானிகள்

# செந்தமிழ்த் திலகம்

என்னும்

# பக்திரஸக் கீர்த்தனைகள்.

இவை

கன்னிச்சமீன் சரபம் உடுமலை

## முத்துசாமிக் கவிராயர் அவர்கள்

மாணாக்கர்

**R. K.** பூமிபாலகதாஸ் அவர்களால்

இயற்றப்பெற்றன.

---

மதுரை

அ. தர்மலிங்கம்பிள்ளை அவர்கள்

வெளியிட்டது

ரிஜிஸ்டர்டு காபிரைட்]      1920      [விலை அணா ஐந்து

OFFICE OF THE REGISTRAR OF ... 4- JAN 1921 MADRAS.

ஸ்ரீஜ்ஞானசம்பந்த விலாசப் பிரஸ், மதுரை.—19-0.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகல கனதனவான்களுக்கும், புத்தக வியாபாரிகளுக்கும், புத்தகங்களை அச்சிடுபவர்களுக்கும், வெளியிடுபவர்களுக்கும் தெரிவித்துக்கொள்வது:—

"இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம்" என்னும் பக்திரஸக்கீர்த்தனைகள் என்ற தலைமைப் பெயருள்ள இப்புத்தகத்தை யான் கிரயம்பெற்று இந்தியன் காபி ரயிட் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்திருப்பதால் மேற்சொன்ன தலைமைப்பெயரையாவது அல்லது இதிலுள்ள பாடல்களில் எதையாவது எவராவது அச்சிடுவரேல் அதனால் நமக்கு நேரிடும் சகல நஷ்டங்களுக்கும் ஷையார்கள் பாத்தியப்படுவார்கள். அல்லாமலும் காபிரயிட்டை உல்லங்கனம் செய்த குற்றத்திற்கும் ஆளாவார்கள்.

இங்ஙனம்,

அ. தர்மலிங்கம் பிள்ளை.

# பொருள் அடக்கம்.


1. விநாயகர் துதி
2. குரு ஸ்தோத்ரம்
3. தாய் தந்தையர் துதி
4. அவையடக்கம்
5. பாரத மாதா துதி
6. மாட்சிமை தங்கிய 5-வது ஜார்ஜ் மஹாராஜமன்னர்
7. ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸர்
8. ஸ்வாமி விவேகானந்தர்
9. தாதாபாய் நௌரோஜி
10. மஹாத்மா, எம். கே. காந்தி
11. ஷை ஷை
12. ஸர் ரவீந்திரநாத் டாகூர்
13. ஸர் சி. சங்கரன் நாயர்
14. டாக்டர் சுப்பிரமணிய அய்யர்
15. ஸர் பி. எம். மேடா
16. கோபால கிருஷ்ணகோகலே
17. டாக்டர் ராஷ் பிஹாரி கோஸ்
18. ஸர் டின்ஷா எடில்ஜி வாச்சா
19. பண்டிட் மதன் மோஹன் மாளவ்யா
20. ஸ்ரீமான் பால கங்காதர திலகர்
21. ஸர் நாராயணஜி சந்திரவர்க்கர்
22 ஹானரபில் மிஸ்டர் மோட்டிலால் நேரு
23. ஸ்ரீமான் கஸ்தூரி ரெங்கய்யங்கார்
24. திவான் பஹதூர் வி. கலவலகண்ணன் செட்டியார்
25. பாபுசுரேந்திரநாத் பானர்ஜி
26. லாலா லஜபதி ராய்
27. மிஸ்டர் எஸ். பி. ஸின்ஹா

28. ஆனரபில் பேடல்
29. பரோடா மஹாராஜா கயக்வார்
30. மிஸஸ் அன்னி பெஸன்ட் அம்மை
31. ஸ்ரீமதி சரோஜினி நாயுடு
32. ஹார்னிமென்
33. மிஸடர் ஆண்ட்ரூஸ்
34. பாபு பெபின் சந்திர பால்
35. மிஸ்டர் ஆனந்த மோஹன் போஸ்
36. மிஸடர் அப்துல் ரகீம்
37. கனம் சதாசிவ அய்யர்
38. கனம் எஸ் ஸ்ரீனிவாச அய்யங்கார்
39. மிஸ்டர் மகமடாலி
40. மிஸ்டர் ஷக்குடலி
41. திவான்பஹதூர் மாதவராவ்
42. திவான்பஹதூர் கேசவபிள்ளை
43. திவான்பஹதூர் தியாகராஜசெட்டியார்
44. டாக்டர் டி. யெம். நாயர்
45. ஸ்ரீமான் ஏ. ரெங்கசாமி அய்யங்கார்
46. ஸ்ரீமான் கல்யாண சுந்தர முதலியார்
47. ஸ்ரீமான் சத்திய மூர்த்தி
48. மிஸ்டர் ஜியார்ஜ் ஜோஸெப்
49. கனம் ராமராயனிங்கார்
50. கனம் ஜி. சுப்பிரமணிய அய்யர்
51. கனம் டாக்டர் வரதராஜுலு நாயுடு
52. கனம் சிதம்பரம் பிள்ளை
53. ஸ்ரீமான் சுப்பிரமண்ய சிவா
54. திவான் பஹதூர் வெங்கிட்டரத்தின நாயுடு
55. கனம் இலங்கை இராயநாதன்
56. கன்னிச்ரமீன் சரபம் உடுமலை, ஸ்ரீமான் முத்துசாமிக் கவிராயர்
57. மங்களம்.

உ

பரமபதி துணை.

---

# இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம் என்னும் பக்திரஸக்கீர்த்தனைகள்

## 1. விநாயகர் துதி.

வெண்பா.

தேசாபி மானிகளின் றிவ்யசரி தங்கூ[illegible]ப
பாசாங் குசனைப் பணிகுவாம்—நேசச்
சுமுக வளஞ்சேரத் துரைத்தனத் தார்வாழ[illegible]
தமிழே தலையெடுக்கத் தான்.

---

## 2. குருஸ்தோத்ரம்.

வெண்பா.

ஐந்துபுல னொன்று யடங்கித் துதித்தாக்காற்
சந்ததமு மெய்ஞ்ஞானஞ் சாருமே—விந்தைச்
சரதகுண தீப சமுகரூப கண்ய
சரபமுத்து சாமி சரண்.

## 3. தாய் தந்தையர் துதி.

வெண்பா.

தந்தை மனமகிழத் தாரணியி லீன்றெடுத்த
எந்தாய்க் கமலசா ணேற்றுவாம் — செரந்தத்
தேசாபி மானிகளின் றிவ்யசரி தங்கூறப்
பாசாபி மானமெலாம் பார்.

---

## 4. அவையடக்கம்.

12911

வெண்பா.

வான்மாரி பெய்து மரக்கிளையிற் றுளிருந்து
தான்மாரி பெய்தகதை தக்குமே — யான்பாடுந்
தேசாபி மானிகளின் றிவ்யத் திலகமதும்
நேசானு சாரமென நேர்.

---

## 5. பாரத மாதா துதி.

இராகம் — கல்யாணி தாளம் — ஆதி.

பல்லவி.

பார த மாதா துணையே

அநுபல்லவி.

பலபல வளமது நிலவிய பரிமள (பார)
பக்தர் சி ரோன்மணி சக்தியு லாவிய (பார

பண்டித கல்விப் பாவலர் குணமிகும் (பார)
பட்சமி குத்தொளிர் லட்சண வித்தக (பார)
பாசாபி மானமொடு தேசாபி மானம்வளர் (பார)
பட்டம் ஐந்தாம் ஜார்ஜூ மகாமணர்
இட்டங் குலவிய சிட்டர்க ணிதிபெறு (பார)
பண்புறு மிந்திய நண்பர்கள் தங்கிய (பார)
பாமகிழ்ச்சி யேமிகுத்த தேசபக்தர் வாழ்மகத்வ(பார)
பாகவ சீகர நீதம நோகக (பார)

சரணம்.

சீத நாரத மாமுனி தேவர்கள்
பேர்பெறு ராமவை போக சு யாதன
காரண சௌனக வான்மிகி கௌதமர்
ஆரண பூஜித தாதாபாய்நௌ ரோஜிதங்கிய (பார)

கம்பன் ஒட்டக் கூத்தன் காளி
தாசன் பொய்யா மொழியொடுசங்கப் புலவர்கள்தாமிகு(பார)

வாய்ந்தம காத்மா காந்தி கோகலே
வாய்மைம மிகுத்திடு பாலதிலகரொடு சீலமுளாவிய (பார)

சகலமும் வளமுறு சரபம் முத்நு
சாமிக் கடிமை பூமி பால தாஸன் ஜன்ம பூமியாகிய (பார)

—:o:—

## 6. மாட்சிமைதங்கிய 5வது ஜார்ஜ் மஹாமன்னர்

இங்கிலீஷ் நோட்.

ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தி அவர்கள் ஆட்சியே
அகிலபூசி தப்ரதாப சுகிர்த மாட்சியே (ஐந்)
இந்தியாமி குந்தராஜ ரீகங் கொண்டவர்
சடிலாத க்ரீடாரஞ்சி தந்தி ரண்டவர்
இசைதங்கும் நயசிங்கக் கொடியாளர்
இகமெங்கும் புகழ்பொங்குங் குணவாளர்
என்றென்றுமி ருந்தும்புவி யெங்கும் வாழ்க
இதயம்புரி வுடனும்பெரு சங்கஞ்சூழ்க
பதுமத்துள் வளர்முத்து சாமிசீஷன்
பாடலால யம்பூமி பாலதாஸன் (ஐந்)

---

## 7. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

விமல—கமல என்ற மெட்டு—பின்மகுடம்

ராம கிருஷ்ண பரம ஹம்ஸ நாக ரீக குண தயாள
கா ரு வி த தீர புருஷன் (ராம)
ஸீக்ஷமசுகிர்த விஜயனே தேகபுனித சமயனே
இடபுயபல சுபவசிகர மொடுகுலவிய நயசுசிகர (ராம)

சாமபேத தானதண்ட சதுருபாய நீதிகொண்ட
சமுகரஞ்சித பலமிகுந்திடு சுமுகசுந்தர சுகசுதந்தர (ராம)
நேமயோக சாஸ்த்ரபாகன் நித்யவுசித காத்ரதேகன்
நிதிமகள்தினம் பதியெனவளர் அதிபதியெனக்கதிமுறைதரு
நாமமுத்து சாமிசீஷன் நாடும்பூமி பாலதாஸன்
நனிவுறுதமிழ் மனமகிழ்கன கருணையெபெறு விதாணஜெய()

## 8. ஸ்வாமி விவேகானந்தர்.

மங்கைமார் தங்க என்ற மெட்டு பின்வேறு.

சுவாமி விவே கானந்தம்
சுந்தர மாஞ் சு கந்தம் (சுவா)
நேம கு ணனு ஜெயன்
நித்ய ம னே விஜயன்
பூம வ சீர நயன்
பொங்குஞ் செந்தமிழ் தங்கும் ரஞ்சித (சுவா)
ராமகிருஷ்ண பரம வஸ்ய
ஞானபிர தாப சிஷ்யன்
சேமசுக மான நிச்சய
சிந்தையி லன்புத ழைந்தச வுந்தர (சுவா

ஜாதி மத பேதங்களுஞ்
சம ரச நீதங்களும்
வேதமுறைப் போதங்களும்
தங்கிட வெங்கினுஞ் சங்கமு ழங்கிய (சுவா)

இங்கிலண் டமெரிக்காவு
மெண்டிசையி லுள்ளதீவுந்
தங்கிய பேர்கள் மேவுஞ்
சந்தத் தமிழ்பிர பந்தஞ்செழித்திட (சுவா)

ஆணி முத்து சாமி சீஷன்
ஆகும் பூமி பால தாசன்
பேணி நத்தி டும்பிர காசன்
பேதைய ரறிவைப் பேரறி வாக்கிடுஞ் (சுவா)

---

## 9. தாதாபாய் நெளரோஜி.

புதிய பார்ஸீ மெட்டு

தாதா பாய்நௌ ரோஜி இன்பந்
தங்கு மெங்கும்புவி துங்க முறுந்
தன்மை சத்வமி குத்துவி ளக்கிடுந் (தாதா)

நீதா குணகண்ய கெம்பீரன்
.... நித்ய கன புண்ய சிங்காரன்
நிச்சயப்ர சித்திபெற்ற வச்சிரத்தி டப்புயத்துத் (காந்தி)

தேசாபி மானநற் சிந்தை யுள்ளோன்
திவ்யவ சீகர மூந்து நல்லோன்
திட்டமுற்றநல் விஷ்டபக்தி அதிர்ஷ்டவற்புத சற்குணத்துறு (காந்தி)

தேசார் செழுந்தமிழ் வித்வ சிங்கம்
திடமுத்துசாமி மனோ துங்கம்
சீலமிகும்பூமி பாலகவிநேச ரானசுகபோஜ தீரநயராஜ (காந்தி)

---

## 10. மகாத்மா எம். கே. காந்தி.

நன்னபியாரரே என்றமெட்டு பின்மகுடம்
காந்திம கான்பிர சங்கம்
கண்டவர் நெஞ்சமே துங்கம் (காந்தி)

கருணைக் கிருப்பிடமே கண்யம காதிடமே
அருண்மெய்த் திடுந்தடமே
அகிலபூசி தப்ரதாப சுகிர்தமோக னத்துலாவுங் (காந்தி)

வாயந்தசு கானுபோகன் மாட்சிமைம ஹானுபாவன்
மாசறு ராஜரீகன்
மார்க்கதீர்க்க யோக்பஸ்லாக்ப பாக்பவாக்ய காத்ரரோக்ப (காந்தி)

கனஜீவ காருண்யன் காசினிபு கழும்புண்யன்

காரணஞான கண்யன்

கற்பகவிற்பன சற்குணதீபகன் அற்புதலட்சண விக்ரமதீபகன்

சரபமுத்து சாமிசிஷன் சாற்றும்பூமி பாலதாஸன்

வரதகுண வான்கள்நேசன் [ர்யன்

வாழ்த்தும்பாட்டில் சீர்த்திவீர்யன் கீர்த்திராஜ்ய நேர்த்திக்கா

---

## 11. ஷை

இராகம் — கல்யாணி தாளம் — ஆதி.

சீமையெங்கும் புகழ் வாய்ந்த சீமான்
தேசாபி மானி யெங் காந்தி மகான்
சித்த சுத்தி பெற்ற வித்த
கப்பயிர்ச்சி யுற்ற நித்ய (சீமை)

நாமகள் தங்கும் நயவ சீரன்
நாகரீ கருண மான தீரன்
நத்திலட்ச ணப்ரசித்தி
உத்தமர்க்கிகா ஞத்திபெற்ற (சீமை)

க்ஷேம தாரச கண்ணியமே
இட சத்வீரிய புண்ணியமே

சிந்தையன்பு பொங்குமந்திர
வந்தனப்பொ ருந்துசுந்தர (சீமை)
நேமகவி முத்து சாமி சீஷன்
நித்யஜெய பூமி பால தாஸன்
நெஞ்சமேமம விஞ்சுவாய் ம
கிழ்ந்துவந்த னம்பொருந்துஞ் (சீமை)

---

## 12. ஸர் ரபீந்திரநாத் டாகூர்

பார்ஸீ மெட்டு.

கவிச் சக்ரவர்த்திர பீந்திர நாதர்
காரு ண்யநீத மஹா போதர் (கவி)
புவிமெச்சும் புண்யசெந் தமிழோன்
போதிக்கப் பிரகஸ்பதி நிகர்வோன் (கவி)
கல்விப் பரிபாலன கண்யகுணன்
செல்விப் பரிபாலனங் கொள்நிபுணன் (கவி)
சரபத்திற் கதிபட்ச நன்னேசன்
சம்பன்ன பூமிபா லகதாஸன் (கவி)

---

## 13. ஸர் சி. சங்கரன் நாயர்

பஹாரியாலா என்ற மெட்டு

சங்கர நாயர் — இந்த்யா
சமரச நேயர் (சங்)

ஜட்ஜி யென்னும் உத்தியோக லட்சணதீரன்
தர்ம பரி பாலன மனோவுதாரன்-தேச
கார்யோபகாரன் (சங்)

டெல்லி இங்கி லாண்டு சென்று ராஜதத்துவ
வல்லமை புரிந்த திடமானசத்துவ-மிந்திய
தேச வித்துவம் (சங்)

நாடு செழிக்க நாமும் பிழைக்க நல்லதாமெனும்
நீடு சிந்தை கூடுந்திவ்ய சற்சனயோகன்-நித்ய
வற்புத தேகன் (சங்)

சந்தச் சரப முத்துசாமி சம்ப்ரம சிஷன்
சாற்று கவி யோகபூமி பாலக தாஸன்-சாது
சங்கம நேசன் (சங்)

---

## 14. டாக்டர் சுப்பிரமணிய அய்யர்

பார்ஸீ மெட்டு

கனம்ஸ்ரீ டாக்டர் மணி அய்யர்
காரண புருஷ மேரு மதம் (கனம்)

ஜனபரி பாலன சங்கத் தான்
ஜட்ஜி மகௌரவ அங்கத் தான் (கனம்)

தேச நன்மைகள் பலகோடி
தேடிப் புரிந்த சுகஜீவி (கனம்)

முத்துசாமி ம ஞோ துங்கம்
மோகன பூமி பால சங்கம் (கனம்)

---

## 15. ஸர் பி. எம். மேடா

சிராய்த் தந்தை படந்தனே என்ற மெட்டு பின்வேறு

ஸர் பிரோஜி ஷாமீர் வான்ஜி
மேடா மகிப சுகிர்தமே (ஸர்)

சந்தோஷ ரஞ்சிதமே தங்கும் விகசிதமே
சகலதேசமு மகிமையாகவே
அரிய காரிய தரிசியாகிய (ஸர்)

மங்காத லேட்க்ரீடி பம்பாய் முன்ஸிபாலிடி
மகுடந்தரியா மகிபதியென
சுகுண நன்முடி யணியுமன்புறு (ஸர்)

காங்கிர ஸபிமானி கலியுக ப்ரதானி
கல்வியின் சக்தியுஞ் சொல்குரு பக்தியும்
நல்தவ விர்த்தியும் வல்லநற் புத்திசேர் (ஸர்)

சங்கீத சாரநேமி சரப முத்துசாமி
சாலசுகபூமி பாலக தாஸன்
மேலுறஞான போதமேயியும் (ஸர்)

## 16. கோபால கிருஷ்ண கோகலே

ஆஹா எக்யாகுவா என்ற மெட்டு பின்வேறு

கோ பால கிருஷ்ண கோகலே
குணனு ஜெய ராஜ திட
குஞ்சர ரஞ்சித மும்பல மும்பெறு (கோபா)

சோபித வத்யோகதுங்க சோபனவ சிரமே
சொந்தம தமர்ந்துநீதி ராஜநீக தீரமே
இந்தியாவி லெங்குஞ்செய்த ஈடிலாஉப காரமே

இருக்கு நன்புகழ்
விழிக்குஞ் சுந்தர
நிழிக்கு மன்பர்கள்
துதிக்கு மின்பமே (கோபா)

சட்ட திட்ட இட்டபரி பாலன நேர்த்தி
தங்கிட இந்தியா வசந்த சாதன பூர்த்தி
எட்டுத் திசைகளெங்கும் பொலியுமிதமிகுங் கீர்த்தி

தரிக்க மெய்தினம்
உழைத்த கண்ணிய
சுகத்தி லின்புறு
திருத்தகு பொருள் (கோபா)

முத்தமிழ் வித்துவரத்ன முத்துசாமி சீஷன்
மோகன விசேடபூமி பாலக தாஸன்
சித்தசுத்தி யிற்றழைத்த செல்வர்கள் நேசன்

திணித்த செந்தமிழ்
உரைத்தி டுந்தகை
பெருத்தி டும்புவி
களிக்கு மந்திர (கோபா)

---

## 17. டாக்டர் ராஷ் பிஹாரி கோஸ்

ஆபமுலேல என்றமெட்டு பேர்சி லயன் . . . .

டாக்டர் ராஷ் பிஹாரி கோஸ்

நளின சுந்தர தேகனே

நரமரஞ்சித தீனபங்கய
நேம முங்குண வாலயம் பெறு (டாக்)
வித்யாவி நோதன் விளங்குநன் னீதன்
மே தகுபல ராஜ பூசித
நேசதேசவி லாசமோகன (டாக்)
திடகாத்ர தேகன் தெய்வீக யோகன்
இணித்த செந்தமிழ் மகத்வ ரஞ்சித
மிகுத்த நற்புகழ் விசித்ர சுந்தர (டாக்)
சாபகவி முத்து சாமிதரிசித்து
சாலவும் பூமி பாலகன் கவி
சீலமு மன்ற வேமிகுந்திடும் (டாக்)

---

## 18. ஸர் டின்ஷா எடுல்ஜி வாசா

டோமரி மெட்டு

ஜனபரிபாலன ஸர்டின்ஷா வாசா (ஜன)

ஜனோபகார மதாபிமான சம்பந்தம காண்
தருசுந் தரமுந் தருசம்பனமுந்
தயாளகுணமும் நியாயமனமுந் தங்கிடுஞ்சுகாண் ()
சாத்வீக குணாகிதன் சம்பூர்ண பலசுகிர்தன்
தருவுக் கிணையற் புதசத் தியநித்தியனே (ஜன)
சரபத் தடிமை பூமிபால தாலவித்வ சுபயோக
சாம்ராஜ்யம் தான் நிலைபெறு மதியூகன் (ஜன)

---

## 19. பண்டிட் மதன் மோஹன் மாளவ்யா.

தில்லாண மெட்டு.

மார்க்க தீர்க்க யோக்ய சிலாக்ய
மதன மோஹன் மாளவ்யன்
வரிசை பரவு திரனமயுலவு
வாகனம னேகரன் (மார்)
சீர்த்திபாம்பே படுகொலையினில் திவ்யகாங்க்ரஸ்கூடியே
தீமையெல்லாம் தீய்த்துவந்த செகவிநோத நீடியே (மார்)
இந்த்ய தேசம் விர்த்தியாக எத்தனையோ காலமாய்
ஈடிலா துழைத்து வரும் எங்கள் புருஷ மேருவே (மார்)

கண்ய உடு மலே முத்து சாமி சீட னியமமே
புண்ய பூமி பாலதாஸ போதனவி சேடமே(மார்)

———

## 20. ஸ்ரீமான் பாலகங்காதர திலகர்.

பனைகளி பகார்கைளி என்ற மெட்டு பின்மகுடம்.

பாலகங் காதர திலகர் — விரிந்த
பாருந் கோர் திலகம் — அவர்தம்
பாதயுகளம் — பூஜிக்கப் — பண்படும்வளம்
பரப்பிர்மம் படைத்தவர் தனக்குள்ளே மகத்துவப் (பால)

சீலசா மர்த்ய பூசிதம் - இந்தியா
தேச விகசிதம் - மென்மேலும்
சீர்பெறு முசிதம் - வழங்கச் - செய்தவற்புதம்
திடசுத்த வீரிய மொடுபெற்ற காரியம் (பால)

நேமகார் யார்த்த வந்தனம் — அன்புடன்
நின்று தந்தனம் — பக்திதான்
நீடியமனம் - நிலைக்க — நெஞ்சமே கனம்
நித்யவஸ்து விற்கலந்த சித்தநட்பே ரடுற்றுகந்த (பால)

பரப்பிர்மம் பகவத் கீதமே — ஆரியர்
பாக நீதமே — சுயாட்சி

பரம போதமே - தலைமை - —விரத நாதமே
பர்த்கண்டத்தின் துயர் சிரமந் தவிர்க்கு முயர் (பால)

மாமுத்து சாமியின் சீஷன்—நயபூமி
பாலக தாலன்—கொண்டாடும்
மாட்சிமை நேசன்-தபாள-மாந்தர் விஸ்வாசன்—தனை
மனதினில் நினைவுற அருளது குடிகொளும் (பால)

---

## 21. ஸர் நாராயண ஜி. சந்திரவர்க்கர்

இராகம் தோடி தாளம் ஆதி.

கனம் நாராயண சந்த்ர வர்க்கர்
நமதுதேச மதனில் மேன்மை (நாரா)

ஏரார் இந்த்யா இன்பஞ் செழிக்க
இனிதுடனிருந்து நாமும் பிழைக்க
சீரார் தமிழது மேலுந் தழைக்க
திடசுத்த வீரிய மொடு பெற்று உழைக்கும் (நாரா)

ஜாதிக ளெல்லாம் ஒன்றே யாக
சங்கட துன்பம ழிந்தே போக

இந்திய ரோம்ரூல் சார்வது மாக
இருக்கும் துயரமெலாம் திருத்தமா யேக (நாரா)

சரப முத்து சாமிக் கடிமை
சாற்றும் பூமி பால னுடைமை
விரதம் பேண லாம்மனில் மடமை
விலகுவ தென்னே தெரிகிலேன் கடமை (நாரா)

---

## 22. ஹானரபில் மிஸ்டர் மோட்டிலால் நேரு.

டான்ஸ் மெட்டு.

மோட்டிலால் விஜயநேரு
மோகன மனோகரன்
மூதறிஞர் கார்யதரிசி
யாமெனுஞ் சுபாகரன் (மோட்)

காலதேச காரியாதி
கடவுளருளால் வாழ்கவும்
கருணையன்பி னிடமிருந்து
கண்யமேலுஞ் சூழ்கவும் (மோட்)

விகசிதவி நோதசுந்த்ர
விதரணப் பிரதாபனே

வேண்டிபத யாபரவ
. . . . சிகரதி ராவிடன் (மோட்)
மேன்மை முத்து சாமி சிஷ்ய
மெய்க்கும்பூமி பாலகன்
விளங்கிடுந்த மிழிலன்பு
பொருந்திடுங் குணகரன் (மோட்)

---

## 23. ஸ்ரீமான் கஸ்தூரி ரெங்கய்யங்கார்

இசைந்த யேறும் என்ற மெட்டு சந்தச்சிதைவு.

சிறந்த சென்னை மாகாணமதில் முதலாக
சேர்ந்த காங்க்ரெஸ் தலைமைபுரிந்த குணவானே
பரந்த உலகம் விரிந்தஹிந்துபத் ராதிபன்
பலம்பொருந்தும் ஹோம்ரூல்விஜயம் பலமாகச்
சுந்தர அன்புந் தொடர்ந்தசிந்தை யுடையோனே
சோபன ஐந்தாம்ஜார்ஜுமஹாமனர் அன்போனே
நிரந்தர யுத்தச் சேதிதெரிய வெகுவாக
நீடுமிங்கிலண் டேகியுவந்த கனவானே
கனம பொருந்துங் கஸ்தூரிசுந் தரசீமான்
காணும் பூமி பாலகதாஸ கவிபூமான்

---

## 24. திவான் பஹதூர் வி. கலவலகண்ணன் செட்டியார்.

டோமரி மெட்டு.

கலவல கண்ணய பூபதியே காசினியிற் கருணாநிதியே
கலஉலகிற் கொருநன்பதியே நாளுமுலவிய ஸ்ரீததியே (கல)

தொஹைபரா

ஹைஸ்கூல் காலே ஜாஸ்பத்ரி முதலாய
அரிய உபகார பூமான்
அண்டர் புகழ் லண்டன் முதல்
அன்பே பெருத்த ஸ்ரீமான்

பாட்டு

முத்துசாமி சீடன்பூமி பாலக தாஸன்
வித்தைக்கரு கூலமாவி தாணநேசன் (கல)

---

## 25. பாபு சுரேந்திர நாத் பானர்ஜி.

கண்ணுன ஜானகி என்ற மெட்டு பின்மகுடம்

சோபன மானவி ஃசட்டவ சிரசு
ரேந்திர நாத் பானர்ஜி (சோ)

சோபித மோகன குணவாளன் ஸ்ரீல மனோகர சுதயாளன்
சுந்தரமிகு குந்தமேசு கம்பெறுத னஞ்செயனுர் (சோ)
ஐ. வி. எஸ்ஸின் அதிகாரன் அற்புதலட்சண சுகுமாரன்
சித்தநிட ரத்னநட மிட்டசுக இட்டபலனுர் (சோ)
சம்ப்ரம ரஞ்சித தடமார்பன் சம்பனமும் பெறுவைபோகன்
சட்டவய ணப்படிம கத்துவமி குத்திடுநல் (சோ)
சந்தச்சரப பாமுத்து சாமிக்கடியவ னெநும்சுக
சாதகபூமி பாலகதாஸன் பாடியபாட லேசுகவி வைம (சோ)

——

## 26. லாலா லஜபதி ராய்.

இராதி யாங்கே என்ற மெட்டு பின்வேறு

லாலா லஜபதி ராய குணநிதி
நய சுப கன ஜெயமே (லா)
சீலார் கியானி தேசாபி மானி
திடபர வசகுண விதரண விகசித (லா)
தீர்க்க சம்பன்னன் தேசுறு கன்னன்
செகமதி லனைவருந் துதிகொளுமுதல்வன் (லா)

சீர்த்தி நன்னீதன் மார்க்க அத்வீதன்
சிவனடி யவர்மிசை மனமது கனிவுறும் (லா)
பூசிதநேமி புகழ் முத்துசாமி
பூமிபாலக தாசன்பாடிய கீதஞ்சரியென நாளுமுலவிய()

---

## 27. மிஸ்டர் எஸ். பி. ஸின்ஹா.

இங்கிலீஷ் ப்யாண்டு.

மிஸ்டர் எஸ். பி. ஸின்ஹ மேதினிக்குள் கண்ணு
கிய நிதிபெறு ஜெயதிடபல
மொடு குலவிய குணவசிகர (மிஸ்)
தேசபக்தி ராஜபக்தியான் ஸ்ரீமான் அன்பு கூறுமகான்
சென்றும் லண்டன் கண்டும் இந்திய
மந்த்ரி மாண்டே குவினிடமருவிய (மிஸ்)
இந்திய நாடுவாழ்க இருக்குந் துன்பந்தாழ்க
எண்ணிப் பலபல கண்ணிக் காரிய
தன்யப்பேர் பெறு பொனனுக்கினிதுறு (மிஸ்)
சுப முத்துசாமி மருவிநத்து நேமி

தருபூமி பாலதாஸ்
கவிமுறை தழுவிய (மிஸ்)

---

## 28. ஆனரபில் பேடல்.

பார்ஸீ மெட்டு.

பிரபல குணநய பேட்டல்
பேணும்தேச கார்யநேச
வீர்யமாகவே யுத்தேசம் (பிர)

இந்த்யா ஒருமையாகிடவும் இருக்கு மிடுக்கணைகிடவும்
எத்தனையோபல இஷ்டசமேதக
முற்றவரோதப வித்யமனோகரன் (பிர)

சரபஞான முத்து சாமிபாதம் தரிசித்து
விரதம் பூமி பாலகவி
மேலும்மேலு மபிமான (பிர)

---

## 29. பரோடா மஹாராஜா கயக்வார்.

மேரே தர்தேஜீ கர்கி என்ற மெட்டு போலிலயன்

ப ரோடா மகாராஜன் — கயக்
வார் சிங் விசேஷன் ப(ரோ)

மேடாவி ஞேதன் மெச்சும் பிரக்யாதன்
விகசிதலட்சண சுகிர்தமிகுத்திடு . . .
மகிபசமர்த்துள வரகுணசத்ய ப(ரோ)

ராஜாங்கச் சீர்திருத்தம் நாணுவிதப் பொருத்தம்
நல்ல கல்வித்தொழில் பிள்ளைகள் கற்றிட
வல்லமகத்துவ வன்மையளித்த ப(ரோ)

இந்த்ய ஜனபிமானி எங்கோன் பிரதானி
இந்த உலகினில் வந்துபலவித
சொந்தமிகுந்திடு நன்மைகள் தந்த ப(ரோ)

சகலவித் துவநேமி சரப முத்துசாமி
சாலகுண பூமி பாலகதாஸ
சீலவரோதய ஞானவசீர ப(ரோ)

---

## 30. மிஸிஸ் அன்னி பெஸன்ட் அம்மை.

இங்கிலீஷ் ப்யாண்டு.

அன்னை அன்னி பெஸண்டம்மை
அறிவே புவியே புகழ் செம்மை

ஆஹா ஹா தேசாபி மானி
. . . . ஆர் பெற்று ரிதுபோற் பேணி (அன்)
காங்க்ரெஸ் மீட்டிங் கௌரவ இந்தியா
காரிய தேசவி சாரணை பேசு மு
தாரகுணாலய மேவுமனோகர (அன்)
தேசக்குறைகளைப் பேசிப்பேசி
சீர்திருத்த மேநாட்டுங்
காரியத்து ளே பொருத்த (அன்)
சரபப்பட்சி மாமுத்து சாமிக்கவிதை தரிசித்து
சாற்றும்பூமி பாலதாஸன்
ஏற்றுங்கவிதை ப்ரீதிகொண்ட (அன்)

---

## 31. ஸ்ரீமதி. சரோஜினி நாயுடு.

இங்கிலீஷ் பியாண்டு

பாரத மாதா புதல்வி சரோஜி
பண்ணும் ப்ரசங்கமினிதே (பா)

தாரணி மீதெவராகிலு மோதிட முடிவோமோ
தாரத ராதாமேபெறு காரிய மதுவாமோ (பா)

தேசகாரியச் சீர்திருத்தம்
திடமுட னுலவிட பலவிஷ யமதுறும் (பா)

வித்வப்பெருமை விளங்கும் நேர்த்தி மேலுஞ் சரபமாமுத்து
சாமிக்கடிபவனாகும் பூமி பாலதாஸ் நியமித்து (பா)

---

## 32. கனம் ஹார்னிமென்

இங்கிலீஷ் பியாண்டு

மிஸ்டர் ஹார்னிமென் குணனு வீதசேகரப்ர தாபன்
வீரதீர ரூப நேம மேதினி யவதார புருஷன் (மிஸ்)

ராஜப்பிரஜை நிதிமகாத்ம நற்சகாய ஞானதேகன்
நாற்றிசையுங் கீர்த்திபொங்கு நாகரீகமான யோகன் (மிஸ்)

பார்லிமெண்டு சட்ட திட்டபரிபாலனன்
பாகத்தினிது மேன்மைக் கேவும் சுகசீலனன் (மிஸ்)

சரபமுத்துசாமி சிஷ்ய னாகும் பூமி பாலகீதம்
வீரதமுற்று நிகழமோதி மேதினிப்ர காசவள்ளல் (மிஸ்)

---

## 33. மிஸ்டர் ஆண்ட்ரூஸ்

இங்கலீஷ் பியாண்டு

அன்பு மிகுந்த ஆண்ட்ரூஸ்
ஆனரபிள் சுகமேபெஷ் (அன்)

இந்தியா முழுதும் ஒரு மதமாய்
இருக்க எண்ணம் பலவிதமாய்
எண்ணிக் காரிய வண்ணத்தோடிற
மின்னற் போதுறு திண்ணப் பிரகிதி (அன்)

தேசஞ் செழிக்க நாமும் பிழைக்கத்
திடமென மனதினி லெண்ணம்
தீர்க்க மத்து சாமி சீடன்
ஆர்க்கே பூமி பால தாஸன் (அன்)

---

## 34. பாபு பெபின் சந்திர பால்.

தேக்குங்கி மோரா என்ற மெட்டு.

பாபுபெபின் சந்த்ர பால்ய குணையன்
பாரத மாதா படைத் திட்ட தாதா
பாயெனப்புவி மீதிலே ஜெனித்திட்ட (பாபு)

ஜனனு கூலன் தங்குஞ்சு சீலன்
சாத்விக குண சம்பந்த ரஞ்சித(பாபு)
சோபித தேகன் துலங்கும்வை போகன்
சோபன நய சுந்தர வீரிய(பாபு)
மாமுத்து சாமி வாய்ந்தநன் னேமி
வாழ்ந்திடும் பூமி பாலகவி தாஸனே(பாபு)

---

## 35. மிஸ்டர் ஆனந்த ஹோமன் போஸ்

டாரே நாமே முகம்மது என்ற மெட்டு பின் மகுடம்

மிஸ்டர் ஆனந்த மோஹன் போஸ் பாரிலிலங்கிய
பங்கமிலா ஜெய ராஜ சிங்கம்
ஞானந் தவயோகம் நீதமங்காமலே
நாளுமு லாவிய போஜ துங்கம் (ஆன)

தொகையறா.

தேசாபிமானம் மேற்கொண்ட திடகாத்ர தீரஞானன்
நேசாநுசார அதியூக சத்ய நித்ய மதாபி மானன்
திரமிகு மறிவது வளரு முல்லாசன்
தேசங்கள் தோறும் விநோத வியாசன்

. . . செந்தமிழ்ச் சங்கம் எங்கும் ப்ரசங்கம்
தீன தயாளவ சீர தங்கம் (ஆன)

தொஹையரா.

பாகான பாலர்கள் குணசீலமாகிடப் பாடசாலை யினிமித்தம்
வாகான காலேஜி முதலாய உபகாரம் வன்மையாய்ச் செய்த [சித்தம்]

வதன மனோகர வடிவுள்ள யோகன்
வகை பெறு சுபகர நயனவு தாரன்
மாமுத்து சாமி சீடப் பிரதாப
மாகிடும் பூமி பாலகவி (ஆன)

---

## 36. மிஸ்டர் அப்துல் ர்கீம்.

டான்ஸ் மெட்டு.

அகில பூசிதப் ரதாப அப்துல் ரகீம் சுகிர்த யோக
ஞகும் பாக்யன் (அகி)

ஜட்ஜிப் பவர் பெறு உத் யோகன்
சர்ஜன பரிஜன மெய் போகன்
தங்கும் இந்த்ய பரிபாலன
தயாள குண சிந்தா மணி (அகி)

விஜய மனோகர வாசாலன் . . .
விளங்கு தேச அபி மானன்
வித்வ முத்து சாமி சிஷ்ய
வீரபூமி பாலதாஸ் (ஆ)

## 37. கனம் சதாசிவ அய்யர்.

கடவுள் தன் சேயா என்ற மெட்டு பின்வேறு

சதாசிவ அய்யர் ஜட்ஜி உத்யோகர் (சதா)
மதாபி மானங்களென்றும் மனதினில் முக்யம்
விநோதபிப் பிராயம் கொண்டவை போகன் (சதா)
ஜாதி ஜனங்கள் பரி பாலன விஜயன்
சம்பந் தந் தங்கிய தாஷ்டிக வசியன் (சதா)
மா முத்துசாமி சீடப்ர தாப
பாலிடும் பூமி பாலக தாஸ (சதா)

## 38. கனம் எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார்

மன்மதா யின்னதென்ன நீதி என்ற மெட்டு

ஸ்ரீனிவாச ராஜபோஜ திவ்யபுருஷ மேருவே
தேசாபிமானம் பெருகு திரமை யோகமே (ஸ்ரீ)

ஞானயோக தீரவீர நாகரீ கனே
நாளு நன் மதாபிமான மொன்றாகவே (ஸ்ரீ)

கஷ்டப்பட்டுக் காரியாதிக் காரணகுண நயனே
இஷ்டதத்வ தீனதார இன்பத்திட மயனே (ஸ்ரீ)

பூமிபால தாஸராதி புகழுமமுத புனிதனே
போதமாண்பு மேல்விளங்கு போற்றிடும் உசிதனே (ஸ்ரீ)

---

## 39. மிஸ்டர் மகமடாலி.

டோமரி மெட்டு

மகமடாலி சுகிர்தயோக வசனதீர கார்யவான் (மக)
மாம்டஜாதி இந்த்யஜாதி வர்க்கமொன்று நீடவே (மக)
வருஷயாட்சி நிதிமகாத்ம வரிசையின்பங் கூடவே (மக)
கஷ்டமுற்று இஷ்டதத்வ காரியத்திலே தினம் (மக)
காரணப்ர தாபசித்தி வீரயுக்தியாம் கனம் (மக)
போற்றுமுத்து சாமிவித்வ பூமிபால தாஸனே (மக)

---

## 40. மிஷ்டர் ஷக்குடலி

கெஜல் மெட்டு

சகலவிஜய சாமர்த்ய ஷக்குட்டாலி

தருவிசேஷ சுகிர்தயோக செயவினோதி
இந்த்யாவொன்று கூடவும் இணங்கும் ஓம்ரூல் நாடவும் (சக)

அருக்கிராஜ்ய தொழிலிலுப
காரதீர குணநிதி (சக)

தேசமானம் வித்யமானம்
ஜனங்களின் பிரதானமே (சக)

சரபமுத்துசாமிசிட சரதபூமிபாலதாஸ்
சாற்றுந்தமிழ் வித் யாநுகூலசந்ததம் (சக)

---

## 41. திவான் பஹதூர் மாதவராவ்

கலிலோ என்ற மெட்டு

கருணா கர மாதவ ராவ் திட
காத்திர பாத்திரனே திவான்பஹதூர் (கரு)

திருமேவாங் கிய மைசூர் பரோடா
திருவாங் கூர் ராஜ திவான்பஹதூர் (கரு)

ஜனம்சேர் பெறு காங்ரஸ் விஜயம்
கவர்ன்மென்ட் பார்லிமென்டில் தி.பஹதூர் (கரு)

ஜனுபி மானம் பெரிய்தனவே

சகலமும் எடுத்துரைத்த திவான்பஹதூர் (கரு)

வித்யாபி விநோத மகாசுக

சீர்திருத்தம் புரிந்தோன் திவான்பஹதூர் (கரு)

சத்யாறு குலமுத்து சாமிகவி

தகும்பூமி பாலகவி திவான்பஹதூர் (கரு)

---

## 42. திவான் பஹதூர் கேசவபிள்ளை

சிந்து

கேசவ வரோதயகி ரீடி - இந்த

கெடிமுழங்குங் கருணைரசநீடி உயர்

கேள்விபலபல தாழ்வுநிலையறும் (கேச)

இத்யஜனோபகார வீர்யன் - நல்ல

இங்கிலண்டுமெச்சிபநற்கார்யன் - வரு

இதமிக்கப்பெயர்பெற்ற சுகமுற்றதிடவித்த (கேச)

செயிலில்லடை பட்டவர்கள் துன்பம் - தீர

செகமதனி லாற்பவித்த சிங்கம் - வீர

திட மிகு புய பல சுப நய (கேச)

சரபமுத்துசாமிசவி ராஜர் - கர்

தன்னடிமைபூமிபால தாசன் - வரை . . .

செந் தமி ழிடை யன் புறு நல (தேச)

---

## 43. திவான் பஹதூர் தியாகராஜ செட்டியார்

ஜாவுரே ஜாவரியா என்றமெட்டு.

தியாக ராஜ யோக பூம

திடவானே இந்த்ய திடவானே

சென்னை அசோஸியேஷன் முன்சிபால் தலைமை

சீர்பெறப்பலமுறை தழுவிய நிலைமை

தன்னிக ரில்லாத தன்யநற் புலமை

நேர்கியானி இந்த்யதே சாபிமானி (தியா)

சிந்தையில் பிரசைகள் செழித்திட எண்ணம்

திடம்பெறத் தரவரு அழகிய வண்ணம்

மூந்திய கௌரவ மோகன தின்னம்

உடையோனேசெல்வப்படையோனே (தியா)

சந்தச் சரபமுத்து சாமியின் சீஷன்

சௌஷ்த்ரகவனபூமி பாலக தாஸன்

விந்தைத்தமிழதை விரும்புமுல் லாசன்
புகழ்மீதே புவி நிகழாதே (தியா)

---

## 44. டாக்டர் டி.எம். நாயர்.

வருத்துவதழகோ என்ற மெட்டு

மாதவ நாயர் மார்க்கசகாயர்
மாசிலாதயோக மதி யூகசம்ரதாயர் (மாதவ)

போதவியாசவ் ரோதயமோகன
பூசிதராஜவி லாசசமேதக (மாதவ)

லண்டன்முதலிய எண்டிசையும்புகழ்
கொண்டங்குதவிய செம்மல்நீதிபெறு (மாதவ)

மாமதியூகவ சீகரபோதக
நீதிமனோகர மாகியமேலன் (மாதவ)

தேசசுயாதன பாகியகாரிய
மேபெற இங்லண் டேகிய ஸ்ரீகுண (மாதவ)

சீர்பெறுமுத்தா சாமிகவிக்கு
நேர்பெறு பூமி பாலன்துதிக்கு (மாதவ)

---

## 45. ஸ்ரீமான் ஏ. ரெங்கசாமி அய்யங்கார்.

நாச்சேசகாளு என்றமெட்டு பின் மாறுதல்

யோகன் சுப யோகன்

யோகம்பொருந்தும நோகர கார்யனே சுப(யோக)

துங்கமிருந்தசு தேசமித்திரன்

ரங்கசாமிவ சீரதீரன் சுப(யோக)

சங்கந்திரண்டவிந் யாவநு கூலன்

சம்பந்தந்தங்குஜ னபரிபாலன் சுப(யோக)

நித்யம்உலகிற்கு சத்யோபகாரன்

நெஞ்சந்தராதர ரஞ்சிதவீரன் சுப(யோக)

காங்கிரஸ்உபயோக காரணசீலன்

கண்யமிருந்தவு தாரகுணாளன் சுப(யோக)

சாபகவிமுத்து சாமியின்சிஷன்

சாற்றுங்கவிபூமி பாலகதாஸன் சுப(யோக)

---

## 46. ஸ்ரீமான் கல்யாணசுந்தர முதலியார்.

ஓரடி

கல்பாணசுந்தரபூபதி - காந்திபடிகள் (கல்)

சொல்ல வொண்ணாத மகத்துவதீரம்
சுயாட்சி வேணுமென்ற திடசுத்தவீரம் (கல்)
சாதிகளெல்லாம் சகோதரபாகம்
சமரசமாகிடப் பிரபலயோகம்
நீதிகள்பெருகிய நிருமலதேகம்
நித்யவியாசப ராகவிவேகம் (கல்)
சந்தச்சரபமுத்து சாமியின்சீஷன்
சாற்றுங்கவிதைபூமி பாலகதாஸன்
விந்தைத்தமிழைமிக விரும்புமுல்லாசன்
விதரணவிகசித மதுவுறுநேசன் (கல்)

---

## 47. ஸ்ரீமான் சத்தியமூர்த்தி.

பத்திதான்பதாம் நூற்றுக்குமேல் என்றமெட்டு

தேசஞ்சுபக்ஷேமம் ஆகிடுமே
தென்னிந்தியாவிலன்பு மேவிடுமே. (தே)

தேசத்திற்குப் பாடுபடுந் திவ்யசத்தி மூர்த்திபிரான்
நேசத்திற்கே யிணங்க நீடிவருமிந்தியா (தே)
தேசாபிமானமிகச் செழிக்குஞ்சிந்தையுடையோன்
தேசாநுபோக திட்டமுள்ளலட்சணவான் (தே)
பாசாபிமானம்ப டைத்தவை போகதிடன்
நேசாநுகூலமென நீடும்பிரதாபமயன் (தே)
சந்தச்சரபமுத்து சாமிசீடனும்பூமி
பாலகவிதாஸ்மகிழ பாரதமா தாவுலகம் (தே)

---

## 48. மிஸ்டர் ஜார்ஜ் ஜோஸெப்

வண்டாரும்பூங்கணே என்றமெட்டு.

ஜோஸெப் மகாத்ம மனோரம்ய சோபிதனே (ஜோ)
தேசப்பரோபகார திவ்யசத்யாக்கிரஹ
திடமுறையது மனமதில்நிதம்கனங்குலவியசுபநயகுண (ஜோ)
இந்தியாசுயாட்சிபெற இங்கிலண்டு சென்றுவற
இருதயமது பலமுறையது சரதமதுறு வசிகரதரன் (ஜோ)
காங்க்ரெஸ் அபிமான காருண்ய சுகதீன
கருணையன்புறு விரதநண்பது மிகவளம்பெறு சுபநயஞ்சுர ()
சரபமுத்துசாமி தாள்பணியும்நேமி
தரலரஞ்சித பூமிபாலக சிலைசுந்தர நேமதின்புறு (ஜோ)

---

## 49. கனம் ராமராயனிங்கார்.

பார்ஸி மெட்டு

கனம் ராம ராயனிங்கார்
கமனப் பரிபாலன தீரன் (கனம்)

காணும் தேச அபிமானம்
கருத்தில் மிகுத்த சுபதானம்
பேணும்பிரபல சுகதீனம்
பெறவே அன்பு தருஞானம் (கனம்)

எல்லரமதமுமொன்ருக எண்ணும்பரமசாது இவர்
இங்கிலண்டேகிக்கீர்த்திபெற்ற இன்பசுகிர்தமானபவர்(கனம்)
உலகப்பிரசித்தமுத்துசாமிக்கடிமை நேசித்து
இலைப்பூமிபாலகனி வாழ்த்துமமுதமதியூக(கனம்)

---

## 50. கனம் ஜி.சுப்பிரமணிய அய்யர்

சித்தசஞ்சலத்தைவிடுவிடுசீதாதேவிஎன்றமெட்டுபின்மகுடம்

பிர்மகுல சுப்ரமண்ய பிரபுடீகன் - இந்திய
பேதமைய கற்றவந்த ராஜரீகன்
பேசரு தேசுமே னோகர பூசித(பிர்ம)

தர்மகுண வாலய த யாள யோகன் — நல்ல
சங்கதி மிகுந்திடுஞ் சு முக பாகன்
தாரணி மீதில நேகப லாபலன்(பிர்ம)

தேசவள மேனுறவேசெய்தகாருண்யன் — உயர்
சித்ததிட ரத்னகன மான புண்யன்
சேகர வ சீகர சு சீகர வி னோததிட(பிர்ம)

சந்தமுத்துகாமிபுகழ்சாற்றுஞ்சீஷன் — வளர்
சந்ததமிகுந்தபூமி பாலதாஸன்
தன்மகுண முப்பெருகு சம்பனமி குந்திடுசல்(பிர்ம)

---

## 51.கனம் டாக்டர் வரதராஜுலு நாயுடு.

பியாண்டு மெட்டு

மிஸ்டர் டாக்டர் வரத ராஜு
மேதி னிச்சுகு மார புருஷன்
விகசித குணமது மிகவுமு லாசமே (மிஸ்)

கஷ்டப் பட்டுத் தேச நன்மை
கருதிய பிரபல விரதிக ளாசியல் (மிஸ்)

மெஜுரா முதலிய இடப் பிரசித்தி
வேண்டிய சுபாய விதரண புத்தி
மேலுக்தேச அபிமானி விளங்குமுலக பிரதானி(மிஸ்)

இவர்போ லெம்போ வியர் பலரும்
இருக்கு மற்ற பிரஜைக ளும்
இணங்கிடில் சுயாட்சி வாங்கிடலாம்
இந்த்யா தேசம் ஓங்கிடலாம் (மிஸ்)
வித்வர்கள் பிரபல மா முத்து
சாமி சீட நியமித்து
வேண்டும் பூமிபாலதாஸ கீதங்களை நேமித்து (மிஸ்)

---

## 52. கனம் சிதம்பரம்பிள்ளை.

ஆரபி தாதிகாள் என்றமெட்டு

செகமீது சிதம்பர வள்ளலார் — செய்த
உபகார மிதுவெனச் சொல்லலாம்
தேசாபி மானத்தை மேற்கொண்டு பலபல
சீர் திருத்தம் புரிந்தார் — அதில்வரு
தீமை யெலாஞ் சுமந்தார் (செக)
பாரத மாதா படைத்த புதல்வரில்
பாக்ய வசந்த சுகான் — அதி
யோக்யஞ் சிறந்த மகான்
பாமர சன மேமகிழ்வுற காரியசுப நீதிகள்மிகு (செக)
மாமுத்துசாமிக் கெளியன்பூமி பாலகவி
தார் புனையும் நேமி
மாதவசுக நீகமேமிகு பூதலமதி லேபுகழ்பெறு (செக)

---

## 53. ஸ்ரீமான் சுப்ரமண்யசிவா.

போதா திருக்கூடல் என்றமெட்டு பின்வேறு

ஸ்ரீபிர்மக் குலசுப்ர மண்யக்ரீடி
தேசாபி மானம் மிகநாடி
சிந்தைவ ருந்திக்க னம்பெறு புண்ணிய (ஸ்ரீபிர்)

நேசானுசாரம் நிகழ்விந்தைநேரம்
நீடிய ராஜம ஞோகர தீரம்
நெஞ்சங்க னிந்துங்கொண் டன்புந்தங் கியநல (ஸ்ரீபிர்)

தேசவுத் தேசஞ்செ ழிக்கசம் பூரண
திடவுருக் கொண்ட மகா வீரம்
பாசாபிமானம்பெருகமென்மேலுமே
பட்சமி குத்த சுகா தீரம் (ஸ்ரீபிர்)

சந்தச் சரப முத்துசாமி கவி
சக்ர வர்த்தி மகிழ் சீஷன்
சந்தமி குந்திடு செந்தமிழ் ரஞ்சித
பூமி பா ல தாஸன் (ஸ்ரீபிர்)

---

## 54. திவான்பஹதூர் வெங்கடரத்தின நாயுடு.

மைத்துனு இதுவென்ன என்றமெட்டு பின்வேறு.

வெங்கடரத்னவி வேகசுந்தர
விதரணசித்ர தி வான்பகதூர் (வெங்)

விரும்பித்தேக அபிமானம்
விளங்குந்தலைமை மதியூகம் (வெங்)

வளைக்குழந்தைகள் காலக்ஷேமஞ்செய்ய
எத்தனையோ வுபகாரஞ்செய்தார்
இப்படி எல்லோரும் சித்தம்விதித்திடில்
இந்தியாமென்மேலும் ஆகிடுமே (வெங்)

சந்தச்சரபத்தான் தம்மைப்புகழ்ந்திடும்
சங்கீததரிசன பூமிபால (வெங்)

---

## 55. கனம் இலங்கை ராமநாதன்.

கூட்டுறவு பேசி என்றமெட்டு

இலங்கை ராமநாதன் இந்தியர்கள் போதன்
இலங்குராஜ கீதன் இருக்கு மன்புநீதன் (இல)

ஜனங்கள் துன்பந்தீர சாந்தவுப காரன்
கனம்பொருந்துந்தீரன் காரணவு தாரன் (இல)

இந்தியர்சு யாட்சி இணங்குமா சாட்சி
விந்தைசேரு மாட்சி விளங்குமன்பின்காட்சி (இல)

சாலமுத்து சாமி தாள்பணியும் பூமி
பாலகாலன் நேமி பருவசுகிர்த வாமி (இல)

---

## 56. கன்னிச்சமீன் சரபம் உடமலை

### ஸ்ரீமான் முத்துசாமிக் கவிராயர்

இங்கிலீஷ் பியாண்டு

தமிழிற் சக்ரவர்த்தி எங்கள் சரப முத்துசாமி
சரணக்கமலத் தறிவுற் றடியேன்
பணிவேன் தணிவேன் தினமே கனவே (தமி)

சுமுகசரஸ்வதிபீடம் நல்ல சோபித காரணக்ரீடம்
சுகவித் தகசற் குருவிற் கினிதே
ஆகிய பூஜித நேசவ சீகர (தமி)

வீரிய வித்துவசிங்கங் கள் வெருவியசரபத் துங்கம்
மேதகு நீதவி நோதசு சீகர
கொண்டைம்புல னுந்தங்கிய சந்தம்பக ரும்பொன்கிளி (தமி)

வேண்டியே பூமிபாலன் சொல் விரத தத்துவ சீலன்
மெச்சத்தரு நட்புற்றிடுபொற்புக்கவி யைச்சொற்றிடு (தமி)

## 57. மங்களம்.

நித்ய மங்களம்.

நிமலவேத முடிவில் மேருவும் (நித்)
சத்ய வசன சரப மூக்து
சாமி வித்வ சேகரம் (நித்)
சரஸ்வதி நிதிமாதா
வனசதளமது சுபமுற (நித்)
தன்ய தண்ட பாணியீச
தத்துவப் பிரகாச வள்ளல் (நித்)
சாற்றும் பூமி பால தாஸ
கீர்த்தனைகள் மேலும்மேலும் (நித்)

---

முற்றுப் பெற்றது.

## வந்துவிட்டது! வந்துவிட்டது!

ஹாலாஸ்ய க்ஷேத்திர முத்தமிழ் வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ.

### சங்கர சதாசிவம்பிள்ளை அவர்கள் இயற்றிய

| | | | |
|---|---|---|---|
| தேசாபிமானிகள் செந்தமிழ் திலகம் (அருமையான கீர்த்தனை பாடல்கள்) ... ... ... | 0 | 4 | 0 |
| புதிய பெரிய பக்திரச கீர்த்தனைகள் ... | 0 | 5 | 0 |
| ராஜாம்பாள் சரித்திரம் ... ... | 0 | 4 | 0 |
| அல்லி சரித்திரம் ... ... ... | 0 | 2 | 0 |
| பூமிபாலக தாசரவர்கள் காவடிச்சிந்து ... | 0 | 2 | 0 |
| கருப்பய்யா தாசரவர்கள் பக்திரக்கீரத்தனைகள் ... | 0 | 5 | 0 |
| ஷை யார் இயற்றிய பாலாபிஷேக காவடிச்சிந்து ... | 0 | 2 | 0 |
| ஷை யார் இயற்றிய நந்தனார் சரித்திரங்கள் . ... | 0 | 6 | 0 |
| தசரதி அல்லது மங்களாபுர ரகசியம். (ஓர் அற்புத துப்பறியும் இனிய நாவல்) ... | 0 | 10 | 0 |
| ஆனந்தபத்மினி அல்லது அஞ்சனக்கோட்டையின் அதிசயங்கள் ... | 0 | 10 | 0 |
| தமன்யரூபி (இனிய தமிழ் நாவல்) ... | 1 | 4 | 0 |
| நாகரத்தினம் அல்லது விஷக்குண்டூசி ... | 0 | 12 | 0 |
| குலசேகரன் ... ... | 1 | 0 | 0 |
| கமலவேணி (தற்கால தமிழ் கதை) நாவல் ... | 0 | 10 | 0 |
| சிறுமணிச்சுடர் 1-ம் பாகம் ... ... | 0 | 3 | 0 |
| ஷை 2-ம் பாகம் ... ... | 0 | 4 | 0 |
| கமலநாதன் ... ... ... | 1 | 4 | 0 |
| சுந்தரிமனோஹரன் ... ... ... | 1 | 0 | 0 |

நமது கம்பெனியில் மேல்கண்ட புத்தகங்களும் இதர எல்லா விதமான புஸ்தகங்களும் ஸ்டேஷனரி சாமான்களும் விலை சரசமாகக் கிடைக்கும்.

டி. கிருஷ்ணசாமிபிள்ளை,
ஆர். வி. அண்டுகோ, மதுரை பிராஞ்சு,
புதுமண்டபம், மதுரை.


டைட்டில்பேஜ்மட்டும்பதிப்பிக்கப்பட்டது.
ஏ சே. வி. பிரஸ் மதுரை-20